மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 56/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | முனுசாமி | நாள் | 09.10.2023 |
| தகப்பனார் பெயர் | லட்சுமண கவுண்டர் | | |

**2 முதல் 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை:–**

1) இவ்வழக்கில் 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால், 1ம் பிரதிவாதியின் பெயருக்கு வழங்கப்பட்ட தவறான பட்டாவை ரத்து செய்ய வேண்டுமென கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2) தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், என் தந்தை மூலமாக எனக்கு பாத்தியப்பட்டது. என் தந்தைக்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால், மேட்டூர் அணை கட்டும் சமயத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்டதால், அதற்கு மாற்று நிலமாக அரசாங்கத்தால் என் தந்தைக்கு வழங்கப்பட்டது.

3) மேற்படி தாவா சொத்து என் தந்தைக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் சமயத்தில் அரசாங்க வகைப்பாட்டின் படி யாரது பெயரில் மேற்படி நிலம் இருந்தது என்றால், பொதுப்பணி துறை பெயரில் மேற்படி நிலம் இருந்தது.

4) இவ்வழக்கில் நான் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ள மேட்டூர் அணை செயற்பொறியாளர் அவர்களின் நடவடிக்கைகளில் 24.05.1950ம் தேதியில் மேற்படி அணை கட்டுவதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு மாற்று நிலம் பெறுவது தொடர்பாக மேற்படி என் உரிமை மற்றும் உடமை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

5) வா.சா.ஆ.1 நடவடிக்கைகளின் படி என் தகப்பனார் மேற்படி செயற்பொறியாளர் அவர்களின் நடவடிக்கை கூட்டத்தில் பங்கேற்றாரா என்றால், பங்கேற்றார். அவ்வாறு என் தந்தை மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டதற்கு ஏதேனும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டதற்கு தனியாக ரசீதுகளோ, ஒப்புதல் அட்டைகளோ எதுவும் வழங்கவில்லை.

6) அதேபோல் மேற்படி கூட்டத்தில் பங்கேற்று எங்கள் தரப்பில் சொத்தின் உரிமை மற்றும் உடமை குறித்து தாக்கல் செய்த ஆவணங்கள் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன்.

7) இவ்வழக்கில் நான் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ள 15.04.1956 ம் தேதிய ஸ்பெஷல் டெபுடி கலெக்டர் ஆபிஸ் மேட்டுர் கவுன்சில் மேட்டுர் அணை என்பவரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் சொத்தை பொறுத்து என் தந்தை ஆக்கிரமிப்புதாரர் எனவும், அதற்கு அவர் 23.04.1956 ம் தேதிக்குள் அடமானம் செய்வது தொடர்பாக மேற்படி நிலத்திற்கான நிலக்கிரய தொகையை வைப்பீடு செய்யவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

8) மேற்படி வா.சா.ஆ.2 உத்தரவிற்கிணங்க என் தந்தையால் தொகை எதுவும் செலுத்தப்பட்டதா என்றால், செலுத்தப்பட்டது. அவ்வாறு என் தந்தையால் தொகை செலுத்தப்பட்டதற்கு நான் எந்த ஆதாரத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

9) மேற்படி வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களின் படியோ தாவா சொத்தை பொறுத்து ஆக்கிரமிப்புதாரர் என தான் என் தந்தை பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் மேற்படி நிலம் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு மாற்று ஈடாக வழங்கப்பட்டது என நான் சொல்வது தவறானது என்றால், சரியல்ல.

10) மேட்டுர் அணை கட்டுமானத்திற்காக என் தந்தை பெயரில் உள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டதற்காக நஷ்டஈட்டு தொகை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றால், இல்லை. அதற்கு மாற்றாக நிலம் தான் வழங்கினார்கள். அவ்வாறு நிலம் வழங்கியதற்கான ஏதேனும் ஆவணங்களையோ, உத்தரவு நகல்கள் எதையேனுமோ நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

11) என் தந்தை தாவா சொத்தில் 1956 ம் வருடத்திலிருந்து வசித்தும், அதற்கு வீட்டு

வரி செலுத்தியும் வந்தார் என நான் சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வரி ரசீதுகளை எத்தனையாவது ஆவணமாக நான் குறியீடு செய்துள்ளேன் என்றால், தற்போது எனக்கு சரியாக நினைவில்லை.

12) நான் சொல்வது பொய்யானது என்றாலும், அவ்வாறு நான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், தாவா சொத்தை தவறான வழியில் அடைய நான் பொய்யாக அவ்வாறு கூறுகிறேன் என்றால், சரியல்ல. 1956 ம் வருடத்திலிருந்து என் தந்தை பெயரில் தாவா சொத்தில் வீடு கட்டி வசித்து வருவதற்கான எந்த ஒரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

13) 1993– 1994 ம் வருடத்தில் வரிவிதிப்பு எண்.13063 என்றும் கதவு எண்.6/23 என்றும் தாவா சொத்திற்கு தவறாக வரிவிதிப்பு எண்ணும் கதவு எண்ணும் வழங்கப்பட்டுள்ளதாக நான் சொல்லும் நிலையில் அவ்வாறு தவறாக வழங்கப்பட்டுள்ளது என்பதற்கான எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். மேற்படி காலகட்டத்தில் தாவா சொத்து யார் பெயரில் இருந்தது என்பதற்கான எவ்வித ஆதாரத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

14) 1969–1970 ஆண்டு முதல் தாவா சொத்திற்கு குடிநீர் இணைப்பு எண்.1051 ன் படி குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு அதற்கான கட்டணங்கள் தொடர்ந்து செலுத்தப்பட்டது என நான் சொல்லும் நிலையில் அதற்கான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. மேற்படி ரசீதுகள் மேற்கண்ட காலகட்டத்தில் யாருடைய பெயரில் இருந்தது என்பதை நான் என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. சொல்லியுள்ளேன்.

15) அதேபோல் தாவா சொத்திலுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு எண்.170 ன் படி 2007 ம் வருடம் வரை மின்கட்டணம் செலுத்தப்பட்டதாக நான் சொல்லும் நிலையில் மேற்படி மின்இணைப்பு யார் பெயரில் இருந்தது என்பதற்கோ, யார் பெயரில்

மின்கட்டணம் செலுத்தப்பட்டது என்பதற்கோ நான் நீதிமன்றத்தில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. என் தந்தை லட்சுமண கவுண்டர் பெயரில் மின்கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுகளை நான் தாக்கல் செய்துள்ளேன்.

16) என் பிரமாண பத்திரிக்கையில் நான் பொதுவாக வீடு என்று தான் சொல்லியுள்ளேனா தவிர மேற்படி வீடு குடிசை வீடா, தார்சு வீடா, வில்லை வீடா என்பது குறித்து நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரிதான். என் தகப்பனாருக்கு இரண்டு மகன்கள் இருந்ததாகவும், வாய்மொழி பாகபிரிவினையின் படி சொத்துக்கள் இருவருக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்று நான் சொல்லியுள்ள நிலையில், மேற்படி மற்றொரு நபர் யார் என்பது குறித்து நான் எதுவும் சொல்லவில்லை என்றால், சரியல்ல. என் பிரமாண பத்திரிக்கையில் அவற்றை சொல்லியுள்ளேன்.

17) எந்த தேதியில் யார் யார் முன்னிலையில் எந்த இடத்தில் மேற்படி பாகபிரிவினை ஏற்பட்டது என்று குறிப்பாக நான் என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால், சரிதான். வாய்மொழி பாகபிரிவினைக்கு பின்னிட்டு, மேற்படி பாகபிரிவினை சரத்துக்களை பத்திரமாக பதிவு செய்து கொண்டோமா என்றால், இல்லை.

18) எந்த தேதியில் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என நான் சொல்கிறேன் என்றால், தேதி சரியாக நினைவில்லை. 1969ம் வருடத்தில் பாகபிரிவினை ஏற்பட்டது. என் பிரமாண பத்திரிக்கையில் மேற்படி பாகபிரிவினைக்கு பின்னிட்டு தொடர்ந்து நான் வீட்டுவரி செலுத்தி வருவதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆதாரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

19) இவ்வழக்கில் நான் 1976, 1977, 1981, 1982, 1986 – 1990 வரையிலான சொத்து வரி ரசீதுகளை (வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.8 வரை) மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதற்கு பின்னிட்டு நான் சொத்துவரி செலுத்தியதாக காண்பிக்க எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மற்ற ரசீதுகள் தொலைந்துவிட்டது. மேற்படி ரசீதுகளிலும் நான் தொடர்ச்சியாக வீட்டுவரி செலுத்தியது தெரிய வருகிறது என்றால், சரியல்ல.

20) வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள சொத்து வரி செலுத்துகை கைபுத்தகத்தில் தேதியோ, யார் யாரால் வழங்கப்பட்டது என்பதற்கான அலுவலக முத்திரையோ, சொத்து வரி பற்றுகை பதிவுகளோ எதுவும் காணப்படவில்லை என்றால், சரிதான். ஆனால், மேற்படி சொத்து வரி செலுத்துகை புத்தகம் நகராட்சியால் வழங்கப்பட்டது.

21) மேற்படி புத்தகத்தில் அதிகாரியின் கையொப்பம் இல்லை என்றாலும், ரப்பர் ஸ்டாம்ப் தான் உள்ளது என்றாலும் சாரிதான். அந்த காலகட்டத்தில் அனைவருக்கும் ரப்பர் ஸ்டாம்ப் தான் முத்திரையாக வைத்து சொத்து வரி புத்தகம் வழங்கப்பட்டது.

22) நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் 3 முதல் 8 வரையிலான எந்த ஆவணத்திலும் என் தந்தையின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களில் மட்டும் தான் என் தந்தை பெயர் உள்ளது என்றால், சரிதான்.

23) வா.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்துள்ள வட்டாட்சியரிடம் நான் தாக்கல் செய்துள்ள பட்டா வழங்குவது குறித்து நான் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை மனுவினை பதிவு அஞ்சல் மூலம் வட்டாட்சியருக்கு அனுப்பினேனா அல்லது நேரடியாக சென்று அளித்தேனா என்றால், தபால் மூலம் அனுப்பினேன். அவ்வாறு நான் தபால் மூலம் அனுப்பியதற்கான ரசீதையோ, அதை வட்டாட்சியர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

(2 முதல் 4 ம் பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.